

உ

குகமயம்.

# மருங்காபுரி சேர்கிரிநாதன் திருப்பதிகம்.

இஃது

ஷை ஜெமீன் பொக்கிஷதார்

வே. கோபாலையரால் இயற்றப்பெற்று,

மேற்படியூர்

குச்சுக்

பொம்மாநாயக்கர் அவர்கள் குமாரர்

திருவாளர். பொம்மையநாயக்கரவர்களால்

திருச்சி

...ஜனுகூல அச்சுக்கூடத்தில்

...பதிப்பிக்கப்பெற்றது.

1923.

14 JUN 1923

18850

Q26:38:21MP
N23

894.811
2768

உ

# சாத்துக் கவிகள்

---

மருங்காபுரி ஸமஸ்தான வித்வான்

திருவாளர் அ. கிருஷ்ணசாமி பிள்ளையவர்களால்

சொல்லப்பெற்றன.

---

## அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீர்மேவு வேதகுல வைதிகவிற் பனமணியாய்த்
திகழும் செம்பொற்
கார்மேவு வரையரசன் பயந்தமர கதக்கொழுந்தாய்
கதிக்குஞ் ஞானப்
பேர்மேவு மீனாட்சி தேவியுபா ஸனமருவு
பெருமை வாய்ந்தோன்.
கூர்மேவு வேதாந்த வாசிகலை யனுபோகங்
குலவு கோமான்.

வடகலைதென் கலைதெலுங்கு மந்திரசாத் திரவித்தை
மணக்கும் வாயான்
திடகாய கற்பமதைப் புரியாயுள் வேதத்திற்
சிறந்த வல்லான்
குடவளையின் குலமுழன்று மணிகொழிக்குந் தென்மருங்கைக்
கோமான் றன்பால்
இடமருவு மாசனத்தா னிடமொருவா வெகு கனத்தான்
இசைப்ர தாபன். 2

புலவரிட மிருந்துதமிழ் பொருள்விநய மாய்ப்பேசும்
புண்ய மெல்லாம்
நலமாக வேயடைந்த சுகிர்தகுண கம்பீரன்
நாட்டார் மெச்சும
பலமகிமை யரியநவவா சார முபசாரம்
பழகி யோங்குஞ்
சலமறியாப் பொறையமையும் வேங்கடரா மய்யனெனுந்
தரும சீலன்.

செய்துவந்த தவத்தெழுந்த சிறுவனுயர் பாவலரைத்
　　தேடி யென்றும்
தூய்பகலைக் கேள்வியெலாந் தொகையாகத் தேர்ந்தெழுத்தின்
　　தொடர்பு மோர்ந்தே
எய்தியதோ டெக்கவியு மொக்கவே பாடிவரும்
　　ஏற்ற முள்ளோன்
மைவிழியார் மயங்குமோ கனரூப கோபால
　　மதன லோலன். 4

இசையெழுநாற் சங்கீத கியானசுக சல்லாபன்
　　எண்ணி னலோ
வசையறவே கதைநாட்யம் வந்தசபை யோர்மகிழ
　　வலுவாய்ச் செய்வோன்
திசையெலாங் கொண்டாடும் வெற்றிவடி வேலவனைத்
　　தியானித் தேத்தும்
இசையென்று மறவாத விரதியருள் பூத்திலகு
　　மியல்புங் கொள்வோன். 5

பொற்கலையா ரகக்கருவி பரமனய னிந்திரனும்
　　போந்து போற்றும்
விற்கலையார் வளர்மருங்கைச் சேர்கிரியார்க் கோர்பதிகம்
　　மிகத்தேம் பாகாய்
முற்கலையோ கம்பயிலு முறையுணர்த்தும் பக்திரசம்
　　முதிர்ந்தே வீசச்
சொற்கலைதேர் கோபாலன் புலவர்களித் துலகேத்தச்
　　சொற்றான் மன்னோ. 6

---

ஷ ஜெமீன் ரேஞ்சாபீஸர்

திருவாளர் கு. இராஜண்ண நாயுடு அவர்களால்

சொல்லப்பெற்றது.

---

வெண்பா.

தக்க வளமருவுந் தண்மருங்கைச் சேர்கிரிவாழ்
முக்கட் கரும்பீன்ற முத்தையன்மேற்—மிக்கபுகழ்
பாமாலை சொற்றான் பாவலநற் கோபாலன்
பூமாது மெச்சு புலவன்.

பாண்டியன் பத்திராதிபர்

ஆ. சத்திவேற் பிள்ளையவர்கள்

சொல்லியது.

---

### கட்டளைக் கலித்துறை.

சந்தனச் சோலை மலிசேர் கிரியுறை ஷண்முகன்மேல்
வந்தனல் லன்பா லொருசீர்ப் பதிகம் வழுத்தி னனல்
நந்தனச் சோலை திகழ்மருங் காபுரி நன்ன கர்வாழ்
அந்தணன் சற்குணன் கோபால னென்னு மருந்த வனே.

---

மருங்காபுரி கிறம முன்சீப் சாமிநாத பிள்ளையவர்களின் குமாரர்

திருத்தகு நல்லசிவம் பிள்ளையவர்கள்

இயற்றியது.

---

### கலித்துறை.

காவார்ந்த சேர்கிரிக் கந்தனெம் மான்றன் கழலிணைக்குப்
பூவார்ந்த செந்தமிட் பாமாலை யொன்று புனைந்த னனல்
மாவார்ந்த மாட மெழிலார் மருங்கை வளநகர் வாழ்
நாவார்ந்த பாவலன் கோபால னென்னு நலத்த வனே.

---

மருங்காபுரி

திருவாளர் பா. கோபாலசாமி நாயுடு அவர்கள்

சொல்லியது.

---

### வெண்பா.

தென்பூத்த சேருகிரிச் சேந்தற்கு மாலையென
மன்பூத்த வோர்பதிகம் வாழ்த்தினன்—பொன்பூதத
கோபால னும்புலவன் கொண்டேற்றி னனச்சிற்
பூபாலன் பொம்மையவேள் போந்து

---

புதுவை
திருவாளர் பி. சங்கரலிங்கம் பிள்ளையவர்களால்
சொல்லப்பெற்றது.

---

## வேண்பா.

தார்பரிவாய்ச் சூடுங் தரத்தர் வளர்மருங்கைச்
சேர்கிரியார் மேற்பதிகஞ் செப்பினான்—தேர்சுரிகைக்
கோபால னாம்புலவன் கோற்றே னமுதுகண்டு
கோபால தாமெனவே கொண்டு.

---

வந்தவாசி ஹைஸ்கூல் தமிழ் பண்டிதரும் திரிசிரபுரம் வாசியுமான
வித்வான் திருத்தகு. சோ. வீரபத்ர பிள்ளையவர்களால்
இயற்றப்பெற்றது.

---

## கட்டளைக் கலித்துறை.

சீரார மலச்சேர் கிரிவாழ் சேவல் வரைகே தனமுயர்த்த
வேரார் முருக வேளடிக்கீ ழெலிலார் பதிக மிசைத்தனனா
வாரா வமுதோ சர்க்கரையோ வருநாளிது வென் றெடுத்தோதப்
பேரார் தருகோ பாலனெனும் பெட்டார் கலையிற் பெரியோனே.

உ

சேர்கிரிநாதன்றுணை.

# சேர்கிரிநாதன் பதிகம்.

## விநாயகர் காப்பு.

### வேண்பா.

சீர்பூத்த தென்மருங்கைச் சேர்கிரிநல் லாண்டவற்கு
நார்பூத்த வோர்பதிகம் நல்கவே—யேர்பூத்த
நந்தா வளமருவ நாடுமோ ரைங்கரத்துத்
தந்தா வளமலர்ப்பூந் தாள்.

## நாமகள் துதி.

### வேண்பா.

நாடும் பொருணான்கும் நல்குகின்ற சேர்கிரிவாய்
நீடுமயில் வேலேந்து நின்மலன்றாள்—கூடுமெழில்
மாப்பதிக மாலை வனையக் கலைமாது
பூப்பதமே கொண்டேன் புகல்

## நூல்.

சீர்மேவு முகமாறு பெறுஞான மணியெனத்
திசையெலாம் புகலு முருகா
திகழுலக முழுதுமோ ரடியா லளந்தவத்
தேமகள் புணர்ந்த முருகா

கார்மேவு சோலைமலை பழனிகதிர் காமமும்
கலந்துகுடி கொண்ட முருகா
கனவிருது படையசுரர் குலமொழிய விடுவேல்
கரந்தனில் வயங்கு முருகா
தார்மேவு கொன்றைமலர் மாலைபுனல் திங்களணி
சங்கரன் பெற்ற முருகா
தமிழ்முனிவ னகமகிழ வந்தாதி புகலவே
தத்துவ முரைத்த முருகா
பார்மேவு புகழருண கிரிநாத னுரைதமிட்
பாவிற் குவந்த முருகா
பருவமழை கண்டுமயில் நடமாடு சேர்கிரிப்
பதிவாழு முரு கேச னே. 1

சத்திசுந் தரிநீலி கௌரியம் பிகைகுமரி
ஸாம்ப்ராஜ்ய மாங்கார ணீ
தன்மயசொ ரூபிதிரி சூலிநின் மலிமேவு
சைதன்ய பரிபூர ணீ
முத்தியருள் சிற்பரி சுதந்தரி சிதம்பரி
மூவர்க்கு முதல்வி ஞானீ
முக்கோண ஷட்கோண சக்கரத் தோங்காரி
மொழியுமறை ரீங்கார ணீ
சித்திகலை வாணிதிரு வாரணி புராதனீ
சின்மயா னந்த ரமணீ
திக்கொளிர் சிம்மாத னத்தேவி மேவுஞ்
சிலாசுத விலாஸ ருத்ரீ
பத்திதரு மன்னையென மெய்த்தவர் வணங்குநற்
பரையுதவு ஞான ரூபா
பருவமழை கண்டுமயில் நடமாடு சேர்கிரிப்
பதிவாழு முருகேச னே. 2

அண்டங்க ளாயிரத் தெட்டுமே கிடுகிடென
வதிரவலை யேழும் வறள
அட்டதிசை நாகங்க ளலறவெவ் விடவர
வலந்தே துடிக்க வுலவு
கொண்டலுடல் கிழியவெண் கிரிகள்பொடி படநவக்
கோள்கள்தம் நிலைமாற வே
கொடியபல வசுரருடல் நூறிப்பி ளந்துசெங்
குருதிப்ர வாக மோடச்
சண்டமா ருதமெனச் சிறுகணை யாவுந்
தகர்ந்துதிர்த் தூளி யாகத்

தாவுபரி கரிகள்தேர் சந்தங்குலைந்திடச்
சங்கார வேலேவி யே
பண்டமரர் கலியோட வருண்மாரி பொழிகின்ற
பரவுசிவ ஞானமுகி லே
பருவமழை கண்டுமயில் நடமாடு சேர்கிரிப்
பதிவாழு முருகேச னே. 3

மாலாட வயனுடை வான்முனிவ ரெதிராட
மலர்விழியி லருளு மாட
மறைகமழும் வாயினழ காடயிரு செவிமீது
மகரகுண் டலம தாட
நூலாட நவரத்ன வடமாட வெழின்மகர
நுவல்புயந் தனி லாடவே
நுண்ணிடைக் கச்சையிடுவாளாட வாசிநிலை
நுக்ர்நாசி யிடை யாடவே
காலாட கிண்கிணி களையாட வேர்தருங்
கழற்சிலம் பொலி யாடவே
கங்கண நிறைந்த இருகரமாட மீதுளங்
களிசே சுவலாட வினிதே
பாலாரு மொழியரிரு பாலாட வேலோடு
பச்சைமயி லேறிவரு வாய்
பருவ மழைகண்டுமயில் நடமாடு சேர்கிரி
பதிவாழு முருகேச னே. 4

மடமாத ரணிகொண்டை மாயச் சொருக்கிலே
வார்த்தை நயசாசத்தி லே
வஞ்சகம டர்ந்துறையு நெஞ்சத் திருக்கிலே
மையிட்ட வேல்விழியி லே
குடமான குங்குமச் சேறணி தனத்திலே
கோவை யதரக்கனியி லே
குலவளைச் செங்கைக் குலுக்கிலே மயலுவக்
குறிப்பார் பிலுக்கி லே யே
திடமாக வேமனது மதிமோக மாகியே
சீவநிலை யுந்தளர்ந் து
திருவடியர் பெரியருரை மொழிமறுத்துன்பதஞ்
சேராது மிகமறந் து
படுகவலை யடிமையொரு மகனென நினைந்துபிழை
பாராது வருகவா சே
பருவமழை கண்டுமயில் நடமாடு சேர்கிரிப்
பதிவாழு முருகேசனே. 5

வாதமொடு பித்தசுர மூலநீ ரிழிவுகுளிர்
வலிகுட்ட முறுகூட்டி னை
மலரயன மைத்ததசை சீழ்தோல் பிணித்தமு
மலஞ்செறியு மண்பாவை யை
சீதசய குன்மமிகு காசம்விக் கல்விருமல்
சேர்ந்துமலி பாழுமுட லைத்
தீயநரி நாய்கழுகு பேய்கூகை தானுணச்
செய்ததின் பாண்டமத னைக்
கோதற வளர்த்துநிச வாழ்க்கைநிலை யென்றவங்
கொண்டுமால் பேய்பிடித் துக்
கொள்கைநெறி செய்தரும முறைபல விடுத்தெழிற்
கொங்கையார் பால்நடிக் கும்
பாதகமிகுந்தபுன் மார்க்கனென் றிகழாது
பட்சமோர்ந் தன்புகூர் வாய்
பருவமழை கண்டுமயில் நடமாடுசேர்கிரிப்
பதிவாழு முருகேச னே. 6

சிந்தைதனி லொருமுறைய தேனுநின் னாமமே
சிந்திக்க வினைகள்மா றும்
தீயபிணி பேய்கொடிய மாயையணு காதுவெண்
திருநீ றணிந்தபேர்க் கு
கந்தமல ராலுனிரு பாதவர்ச்சனை புரிவர்
கனமுற்ற தேவரா வார்
கைகூப்பி யேதொழுது கோவில்வலம் வந்துனைக்
காணுவார் பிறவிகா ணார்.
சந்தத நினைந்துனைச் சிந்தையில் நிறுத்துவோர்
தன்மயம தாகிவாழ் வார்
தன்னையறியாதவொரு புன்மையடி யேனுனைத்
தானறிவ தெந்தவகை யோ
பந்தென வளர்ந்ததன சுந்தரநு தற்குறவர்
பாவைகுஞ் சரிலோலனே
பருவமழை கண்டுமயில் நடமாடு சேர்கிரிப்
பதிவாழு முருகேச னே.

ஆடுமா டென்றுமுயர் மாடவீ டென்றுமெழில்
ஆனைபரி சேனையென் றும்
அண்ணனென் றுடன்வரும் தம்பியென் றும்பெரிய
ஆஸ்த்தியிவை யென்னதென் றும்
காடுகரை யென்றுமங் கூடமீ தென்றுமகிழ்
காதலிய ரென்றுதினமுங்

கருதுபல தருமநெறி பிரளுவார் தெரியாது
காயமிது நிட்டமென்றே
கோடுசெறி பகடுமிசை மறலிவந் திடுபொழுது
கூறுமுறை யேதுமறி யார்
கூட்டத்தி னின்றுநலி பேதைகளி மாற்றுங்
குணக்கடலு நீயல்ல வோ
பாடல்புக ழடியர்தொழு மானந்த யோகனே
பரமகுரு சிவஷண்மு கா
பருவமழை கண்டுமயில் நடமாடு சேர்கிரிப்
பதிவாழு முருகேச னே. 8

முத்தொளி ருமம்வாணகை யரம்பையர் நடிக்க
முனிவர ரிறைஞ்சியேற் ற
மோகவ னிதயர்கள்பல ராடலொடு பாடல்செப
முகிலினங் கண்டுதா ழ
எத்திசை யிலுஞ்ஜெய நமக்கேயெனக் கொடி
யேற்றிஜந்த ருநீழன் மேல்
ஏகசுக போகசய் யோகமா யரசுபுரி
இந்த்ரனுயிர் நிலைநடுங் கக்
கத்துகட லுலகுவா னண்டங் கலங்கவே
கர்ச்சித்து வருசூர னின்
கர்வமொரு கடிகையி லொடுங்கவடி வேல்விடுங்
கருணை கரப்பரம னே
பத்திநிலை யறியாத கடைநாயி னேன்றனது
பாவவே ரறுத்தாள்க வே
பருவமழை கண்டுமயில் நடமாடு சேர்கிரிப்
பதிவாழு முருகேச னே. 9

ஆதியா யந்தமா யண்டபகி ரண்டமாய்
ஆனந்த மயவாரி யாய்
அருள்பொழியு மேகமாய் ஆதார மாய்நின்ற
ஆறெழுத் ததி னுண்மை யாய்ச்
சோதியாய் மாயா விசித்ரமாய்ச் சுருதியாய்த்
துரிய துரியாதீத மாய்
சுத்தநிர்க் குணமதாய் நிரந்தர நிராலம்ப
தூயநல் லத்வைத மாய்
நீதியாய் அகமதாய் புறமுமாய் நேயமாய்
நிட்டைக்கு மோனகுரு வாய்
நீக்கமற மெங்குநிறை யோகமாய்ப் போகமாய்
நிகரிலா முதற்றெய்வ மாய்

பாதியுட னுமைமேவு பரமனுக் கினியபொருள்
　　பகர்ந்தசின் மயவிலா ஸா
பருவமழை கண்டுமயில் நடமாடு சேர்கிரிப்
　　பதிவாழு முருகேச னே 10

வாகான நாற்கவிதை யானுனைப் புகழவோ
　　வயங்குநற் கல்வியில் லை
வண்மையுட னேவாசி நிறுவிச்ச மாதிபெற
　　மனக்குரங் கடங்கவில் லை
சாகாம லேபுவியில் தானெனத் திரியவுந்
　　தந்திரந் தெரியவில் லை
தன்மை யடி யாருறவு பூசைநிலைசன் மார்க்க
　　சாதனத் தியல்புமில் லை
ஆகாத லோபமுழு மூடவஞ் சகரிநட்
　　பணுவளவு மாறவில்லை
ஆசையாம் பெரியதோர் பேய்பிடித் தாட்டியே
　　அறிவினும் தெளியவில் லை
பாகான்மொழி யர் கணவா உண்மை தெரியவிப்
　　பதிகமா மாலையேற் றே
பருவமழை கண்டுமயில் நடமாடு சேர்கிரிப்
　　பதிவாழு முருகேச னே. 11

சுபம்! சுபம்!! சுபம்!!!

180850

**"பணம்"** இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். 'பணம்" என்னும் பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ் நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் வயோவிருத்தரீறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒரு வாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்றுகூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருட முடிவில் ஒரு புஸ்தக உருவகமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை.

வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்" ஆபீஸ், திருச்சி.